

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.3.2025) தலைமைச் செயலகத்தில், காவல்துறையின் பயன்பாட்டிற்காக 32 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் 500 இருசக்கர வாகனங்கள் மற்றும் 300 நான்கு சக்கர வாகனங்கள் (Bolero) மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 28 கோடியே 45 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவிலான 50 நீர்தாங்கி வண்டிகள், 10 ஜீப்புகள் மற்றும் 50 இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நந்தனத்தில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு ரூ.44.50 கோடியில் விடுதி

# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப். 14-ல் திறப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 30 -**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்காக சென்னை, நந்தனம், எம்.சி. ராஜா விடுதி வளாகத்தில் 10 தளங்களுடன் ரூ.44.50 கோடி செலவில் விடுதி கட்டி முடிக்கப்பட்டு, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான ஏப்ரல் 14 ஆம் தேதி நடைபெறவுள்ள திறப்பு விழாவிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.3.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் உயர்கல்வி கனவினை நனவாக்கும் பொருட்டு சென்னை, நந்தனம், எம்.சி. ராஜா விடுதி வளாகத்தில் 10 தளங்களுடன், 121 அறைகளோடு கூடிய 500 மாணவர்கள் தங்கி பயில நவீன வசதியான நூலகம், பயிலகம், கற்றல் கற்பித்தல் அறை, உடற்பயிற்சிக்கூடம், உள் அரங்கு விளையாட்டுக் கூடம் ஆகியவற்றுடன் கூடிய புதிய விடுதி 44.50 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்கத்தை போற்றும் வண்ணம், சமத்துவ நாளான அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி மாணவர்களின் நலனுக்காக இந்த விடுதி திறக்கப்படவுள்ளது.

எனவே, இங்கே வருகை புரிந்திருக்கக்கூடிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் அனைவரும் திறப்பு விழாவிலே கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு இந்தக் கூட்டத்தின் மூலமாக உங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

### காவல்துறை – தீயணைப்பு – மீட்புப் பணிகள் துறை சார்பில்

# ரூ.41.32 கோடி செலவில் புதிய கட்டடங்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 30-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.3.2025) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 19 கோடியே 80 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள் மற்றும் 2 காவல் நிலையங்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில், 21 கோடியே 51 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 45 குடியிருப்புகள் மற்றும் 4 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், காவல்துறை சார்பில் 32 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் 500 இருசக்கர வாகனங்கள் மற்றும் 300 நான்கு சக்கர வாகனங்கள் (Bolero) மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 28 கோடியே 45 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவிலான 50 நீர்தாங்கி வண்டிகள், 10 ஜீப்புகள் மற்றும் 50 இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றிவரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள், காவலர் குடியிருப்புகள் கட்டுதல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு குடியிருப்புகள், பாதுகாப்பு பணிகளுக்காக ரோந்து வாகனங்களை கொள்முதல் செய்தல், காவல்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 21 முதல் இதுநாள் வரை காவல்துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்திடும் வகையில் ரூ.491.43 கோடி செலவில் 2955 காவலர் குடியிருப்புகள், ரூ.58.01 கோடி செலவில் 49 காவல் நிலையக் கட்டடங்கள், ரூ.122.40 கோடி செலவில் 18 காவல் துறை இதரக் கட்டடங்கள் மற்றும் "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் ரூ.55.19 கோடி மதிப்பிலான 253 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளன.

**காவல்துறை சார்பில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள கட்டடங்களின் விவரங்கள்!**

சிவகங்கை மாவட்டம் - திருப்பத்தூரில் 8 கோடியே 71 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 50 காவலர் குடியிருப்புகள், தஞ்சாவூர் மாவட்டம் - திருவையாறில் 9 கோடியே 34 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 46 காவலர் குடியிருப்புகள், என 18 கோடியே 5 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள்;

இராமநாதபுரம் மாவட்டம் - தேவிப்பட்டினத்தில் 93 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம் மற்றும் திருவாரூர் மாவட்டம் - நன்னிலத்தில் 80 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையம், என 1 கோடியே 74 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 காவல் நிலையக் கட்டடங்கள்;

என மொத்தம் 19 கோடியே 80 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள் மற்றும் 2 காவல் நிலையங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, தீயிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பதோடு, இயற்கை இடர்ப்பாடுகளான வெள்ளம், புயல், நிலச்சரிவுகள் போன்றவைகளிலிருந்தும் மக்களை காப்பதும், அவசர உதவி புரிவதும் இத்துறையின் முக்கிய பணியாகும். இத்துறையின் செயல்திறனை மேம்படுத்திட புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் கட்டித் தருதல், பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தருதல், பல்வேறு நவீன கருவிகள் மற்றும் தீயணைப்பு ஊர்திகளை வழங்குதல் போன்ற பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்திடும் வகையில் ரூ.35.64 கோடி செலவில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 204 குடியிருப்புகள், ரூ.53.38 கோடி செலவில் 30 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள், ரூ.2.45 கோடி செலவில் 2 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக் கட்டடங்கள், என மொத்தம் ரூ.91.47 கோடி செலவிலான கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள கட்டடங்களின் விவரங்கள்!**

சென்னை மாவட்டம் - துரைப்பாக்கத்தில் 1 கோடியே 20 இலட்சத்து 64 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 6 குடியிருப்புகள்; மயிலாடுதுறை மாவட்டம் - பூம்புகாரில் 1 கோடியே 10 இலட்சத்து 15 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 2 குடியிருப்புகள்; இராணிப்பேட்டை மாவட்டம் - இராணிப்பேட்டையில் 4 கோடியே 27 இலட்சத்து 2 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 19 குடியிருப்புகள்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் - துறையூரில் 3 கோடியே 53 இலட்சத்து 44 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 18 குடியிருப்புகள்;

சென்னை மாவட்டம் - அம்பத்தூரில் 6 கோடியே 23 இலட்சத்து 88 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள மாவட்ட அலுவலகம் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம்; மயிலாடுதுறை மாவட்டம் - பூம்புகாரில் 1 கோடியே 65 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம்; தேனி மாவட்டம் - கடமலைக்குண்டில் 2 கோடியே 32 இலட்சத்து 35 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம்; திருவள்ளூர் மாவட்டம் - பூந்தமல்லியில் 1 கோடியே 19 இலட்சத்து 30 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம்;

என மொத்தம் 21 கோடியே 51 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை வாகனங்களின் சேவைகளை தொடங்கி வைத்தல்!**

காவல்துறையின் பயன்பாட்டிற்காக 5 கோடி ரூபாய் செலவிலான 500 இருசக்கர வாகனங்கள் மற்றும் 27 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவிலான 300 நான்கு சக்கர வாகனங்கள் (Bolero);

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 28 கோடியே 45 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவிலான 50 நீர்தாங்கி வண்டிகள், 10 ஜீப்புகள் மற்றும் 50 இருசக்கர வாகனங்கள்;

என மொத்தம் 60 கோடியே 54 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவிலான வாகனங்களின் சேவைகளை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தெற்கின் மேல் தொடுக்கப்படும்

# அரசியல், சமூக, பண்பாட்டுப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள – உகாதித் திருநாள் புத்தாண்டுச் செய்தியில் கோரிக்கை!

**சென்னை, மார்ச் 30-**

**"தெற்கின் மேல் தொடுக்கப்படும் அரசியல், சமூக, பண்பாட்டைத் தடுத்து நிறுத்த அடுத்த தலைமுறையையும் நாம் ஆயப்படுத்த வேண்டும்" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள உகாதி புத்தாண்டுச் செய்தியில் கோரிக்கையாக வைத்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உகாதி திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழின் உடன்பிறப்பு மொழிகளான தெலுங்கு, கன்னட மொழி பேசும் மக்கள் புத்தாண்டாகக் கொண்டாடும் உகாதி திருநாள் நாளை (30-03-2025) கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள மொழிச்சிறுபான்மையினரை என்றும் மதித்துப் போற்றி அவர்களின் உற்ற தோழனாய் விளங்குவது கழக அரசு. உகாதி திருநாளுக்கு அறிவிக்கப்பட்ட அரசு விடுமுறை அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ரத்து செய்யப்பட்டாலும் 2006-ஆம் ஆண்டு அதனை மீண்டும் நடைமுறைப்படுத்தியவர் அப்போது முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆவார்.

தமிழ் முதலிய திராவிட மொழிகள் பேசும் தென் மாநிலங்கள் அனைத்தும் தொகுதி மறுசீரமைப்பில் தங்கள் குரல் நெரிக்கப்படும், நாடாளுமன்றத்தில் வலிமை குறைக்கப்படும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் நமது ஒற்றுமையை மார்ச் 22 அன்று சென்னையில் வெளிப்படுத்தி இருந்தோம். மேலும், அடுத்தடுத்த கூட்டங்கள் நடைபெறவுள்ளன. நாடு முழுவதும் நமது முன்னெடுப்புக்குக் கவனமும் ஆதரவும் பெருகி வருகிறது.

**மொழி அடையாளத்தை அழிக்க முயற்சி!**

இன்று தென்மாநிலங்கள் பொருளாதாரரீதியாக அடைந்துள்ள வளர்ச்சிக்கு முதன்மையான காரணங்களில் ஒன்று அரை நூற்றாண்டுக்கு முன்னரே இந்தித் திணிப்பை எதிர்த்து நாம் நடத்திய மொழிப்போர்தான். இப்போது மீண்டும் இந்தித் திணிப்பு மூலம் அந்த வளர்ச்சியையும் நமது மொழி அடையாளத்தையும் அழிக்கத் திட்டமிட்ட முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வேளையில், தாய்மொழியின் அருமையை உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் உணர்த்த வேண்டும். மொழி இருந்தால்தான் இனம் இருக்கும். தெற்கின் மேல் தொடுக்கப்படும் சமூக, அரசியல், பண்பாட்டுப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த அடுத்த தலைமுறையையும் நாம் ஆயத்தப்படுத்த வேண்டும். இதையே எனது உகாதி புத்தாண்டுச் செய்தியாக, கோரிக்கையாக உங்கள் முன்வைக்கிறேன்.

அறுசுவைப் பச்சடி, மாவிலைத் தோரணம், வண்ணக்கோலம் என எழுச்சியோடு புத்தாண்டை வரவேற்கும் தெலுங்கு, கன்னட உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது உகாதி திருநாள் நல்வாழ்த்துகள். நமது மொழி, அரசியல் உரிமைகளைக் காப்பதற்கான ஊக்கத்தை வழங்குவதாக இந்த உகாதி திருநாள் அமையட்டும்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### அமைச்சர் கே.என். நேரு தலைமை! அமைச்சர்கள் க.பொன்முடி – எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் – எஸ்.எஸ்.சிவசங்கர் – ஆ.இராசா எம்.பி. – மாவட்டச் செயலாளர்கள் முன்னிலை!

# முதல்வர் பிறந்தநாள்: திருச்சியில் இன்று கழக விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் வாழ்த்தரங்கம்!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. துவக்கி வைக்கிறார்! வாழ்த்தரங்கத் தலைமை – கவிச்சுடர் கவிதைப்பித்தன் – அணிச் செயலாளர் அன்னியூர் அ.சிவா எம்.எல்.ஏ. அறிக்கை!

*திருச்சி, மார்ச் 30-*

*தி.மு.க. விவசாய தொழிலாளர் அணி சார்பில் திராவிட நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சிறப்பு கவிதை வாழ்த்தரங்கம் இன்று (30.3.2025-ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு, கலைஞர் அறிவாலயம், திருச்சியில் நடைபெறுகின்றது.*

*விழாவிற்கு கழக முதன்மைச் செயலாளர் -அமைச்சர் கே.என்.நேரு தலைமை வகிக்கிறார்.*

*அமைச்சர் முனைவர் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி, அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் காடு வெட்டி ந.தியாகராசன், மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமுணி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கெளதமசிகாமணி, திருச்சி மேயர் மு.அன்பழகன், திருச்சி மாநகர செயலாளர் மு.மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*கழக விவசாய தொழிலாளர் அணிச்செயலாளர் அன்னியூர் அ.சிவா அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.*

*இவ்விழாவில் அருண் நேரு எம்.பி. குத்துவிளக்கு ஏற்றி வைக்கிறார்.*

*வாழும் சரித்திரம் அவருக்கு வண்ணக் கவிச்சரம்" என்ற தலைப்பில் நடைபெறும் வாழ்த்தரங்கை கழக கொள்கை பரப்புச்செயலாளர் - கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தொடங்கி வைக்கிறார்.*

*கவியரங்கத்திற்கு கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமை வகிக்கிறார். 'கலைஞரின் வார்ப்பு'-என்ற தலைப்பில் நெல்லை ஜெயந்தாவும், திராவிடர் சிறப்பு என்ற தலைப்பில் கவிஞர் தஞ்சை இனியனும், இந்தியாவின் எதிர்ப்பார்ப்பு என்ற தலைப்பில் கவிஞர் இரா.தனிக்கொடியும், உழைப்பின் பிறப்பு என்ற தலைப்பில் கவிஞர் மகாலட்சுமியும் வாதிடுகின்றனர்.*

*விவசாய தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் நன்றி கூறுகிறார்.*

*இவ்விழாவில் கழக விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர்கள் பி.என்.பி. இன்பசேகரன், த.சந்திரசேகரன், இணைச் செயலாளர்கள் சி.ஆர்.இராமச்சந்திரன், ஜெகவீரபாண்டியன், ப.கைலாசம், துணைச் செயலாளர்கள் வ.அன்பழகன், பா.அருண்குமார், இரா.சங்கர், பி.பாக்கியநாதன், கு.தெ.முத்து, சா.ராஜசேகரன், எஸ்.சேதுராமன், கொடி சந்திரசேகர், ர.முத்துக்குமாரசாமி, கே.ஆர்.என்.போஸ், வ.து.ரு. ஆனந்தன், கே. கணேஷ்குமார் ஆதித்தன் உள்பட கழக முன்னணியினர், தோழர்கள் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.*

*விழாவிற்கு வருகை தருவோரை வரவேற்று திருச்சி மாவட்ட அமைப்பாளர்கள் எம்.ஏ.துரை பாண்டியன், ஆ.ஜெகதீசன் ஆகியோர் உபசரிக்கின்றனர்.*

### ஆப்பக்கூடல் பேரூர்க் கழகச் செயலாளர்

# கே.கோபாலகிருஷ்ணன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 30-

பவானி சட்டமன்றத் தொகுதி பவானி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆப்பக்கூடல் பேரூர் கழகச் செயலாளர் கே.கோபாலகிருஷ்ணன் மறைவிற்கு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:-

பவானி சட்டமன்றத் தொகுதி, பவானி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆப்பக்கூடல் பேரூர் கழகச் செயலாளர் கே.கோபாலகிருஷ்ணன் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்பதை அறிந்து மிகவும் துயருற்றேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் ஆப்பக்கூடல் பேரூர் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

